| 3,216,675.27 | 4122 | ஆராய்ச்சிக் கொடுப்பனவு | 3,381,720.00 | 3,288,381.56 | 203,147.00 | - | 2,343,243.31 | 741,991.25 |
| 1,838,100.15 | 4123 | மேலதிக கொடுப்பனவு 20% | - | 1,879,075.17 | 116,084.00 | - | 1,338,996.17 | 423,995.00 |
| | 4126 | MCA 35% | - | - | | - | - | - |
| 113,179.68 | 4127 | பொழுதுபோக்குக் கொடுப்பனவு | 200,000.00 | 226,386.00 | 226,386.00 | - | - | - |
| - | 4128 | சீர்படுத்தல் கொடுப்பனவு | - | - | | - | - | - |
| 53,478,013.86 | | | 53,012,720.00 | 49,397,168.86 | 2,829,228.98 | - | 38,902,115.66 | 7,665,824.22 |

| செலவுகள் 2019 | குறியீடு | விபரம் | பாதீடு 2020 | மொத்தச் செலவினம் | Pro 01-01 பொது நிர்வாகம் | Pro 01-02 நிதி நிர்வாகம் | Pro 02-17 பரீட்சை, கல்வி | Pro 03 நூலக சேவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | **ஆளுக்குரிய வேதனாதிகள் - கல்விசார்** | | | | | | |
| 10,650,360.93 | 4101 | சம்பளமும் கூலியும் | 19,276,690.00 | 9,312,596.06 | 1,089,720.00 | - | 6,102,901.06 | 2,1119,975.00 |
| 2,749,649.16 | 4102 | பல்.சேமலாப நிதியம் (U.P.F) | 3,159,560.00 | 3,151,551.26 | 105,255.80 | - | 2,458,724.89 | 587,570.57 |
| 1,021,450.50 | 4103 | ஓய்வூதியம் | 1,025,860.00 | 1,023,323.57 | 120,292.36 | - | 664,351.16 | 238,680.05 |
| 754,220.01 | 4104 | ஊழி. நம். நிதியம் (E.T.F) | 942,060.00 | 724,927.55 | 45,109.62 | - | 514,567.83 | 165,250.10 |
| - | 4105 | ஊழி. சே.லா. நிதியம் (E.P.F). | - | - | | - | - | - |
| 75,000.00 | 4110 | ஏனைய படிகள் | 1,460.00 | - | - | - | - | - |
| 14,796,790.00 | 4115 | கல்விசார் படிகள் | 13,945,000.00 | 13,981,565.20 | 876,434.20 | - | 9,903,968.74 | 3,201,162.25 |
| 17,383,276.21 | 4119 | அழைப்பு விரிவுரைக் கட்டணம் | 10,218,000.00 | 15,013,762.50 | - | - | 15,013,762.50 | - |
| 879,311.61 | 4120 | வாழ்க்கை செலவுப் படி | 862,370.00 | 795,600.00 | 46,800.00 | - | 561,600.00 | 187,200.00 |
| - | 4121 | 20% விசேட கொடுப்பனவு | - | - | | - | - | - |
| 3,216,675.27 | 4122 | ஆராய்ச்சிக் கொடுப்பனவு | 3,381,720.00 | 3,288,381.56 | 203,147.00 | - | 2,343,243.31 | 741,991.25 |
| 1,838,100.15 | 4123 | மேலதிக கொடுப்பனவு 20% | - | 1,879,075.17 | 116,084.00 | - | 1,338,996.17 | 423,995.00 |
| | 4126 | MCA 35% | - | - | | - | - | - |
| 113,179.68 | 4127 | பொழுதுபோக்குக் கொடுப்பனவு | 200,000.00 | 226,386.00 | 226,386.00 | - | - | - |
| - | 4128 | சீர்படுத்தல் கொடுப்பனவு | - | - | | - | - | - |
| 53,478,013.86 | | | 53,012,720.00 | 49,397,168.86 | 2,829,228.98 | - | 38,902,115.66 | 7,665,824.22 |

| செலவுகள் 2019 | குறியீடு | விபரம் | பாதீடு 2020 | மொத்தச் செலவினம் | Pro 01-01 பொது நிர்வாகம் | Pro 01-02 நிதி நிர்வாகம் | Pro 02-17 பரீட்சை, கல்வி | Pro 03 நூலக சேவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **ஆளுக்குரிய வேதனாதிகள் - கல்விசார்** | | | | | | |
| 54,372,880.24 | 4201 | சம்பளமும் கூலியும் | 52,858,310.00 | 60,731,030.51 | 18,023,180.14 | 7,472,846.23 | 28,010,155.44 | 7,224,848.70 |
| 7,846,854.98 | 4202 | பல்.சேமலாப நிதியம் (U.P.F) | 9,723,440.00 | 8,361,417.86 | 2,469,878.72 | 977,913.39 | 3,637,352,34 | 1,276,273.41 |
| 4,228,377.76 | 4203 | ஓய்வூதியம் | 4,124,140.00 | 4,622,895.27 | 1,183,890.97 | 582,694.92 | 2,351,905.63 | 504,403.75 |
| 2,549,362.28 | 4204 | ஊழி. நம். நிதியம் (E.T.F) | 3,091,940.00 | 2,815,542.81 | 787,729.75 | 347,859.45 | 1,323,818.03 | 356,135.58 |
| 913,530.76 | 4205 | ஊழி. சே.லா. நிதியம் (E.P.F). | - | 1,457,351.86 | 379,330.84 | 238,250.09 | 839,770.93 | - |
| - | 4206 | பதில் கடமை கொடுப்பனவு | - | - | | - | - | - |
| 5,270,723.94 | 4208 | மேலதிக நேர வேலை கொடுப்பனவு | 2,805,000.00 | 3,615,634.35 | 1,706,377.37 | 308,948.75 | 1,324,948.82 | 275,359.41 |
| 12,154.15 | 4209 | விடுமுறை தினக் கொடுப்பனவு | 22,000.00 | 26,185.50 | 16,111.50 | 10,074.00 | - | - |
| 77,913.58 | 4210 | ஏனைய படிகள் | 89,540.00 | 75,200.00 | 30,800.00 | 5,400.00 | 29,400.00 | 9,600.00 |
| - | 4212 | பணிக் கொடை | 4,892,000.00 | - | - | - | - | - |
| 10,168,682.07 | 4220 | வாழ்க்கை செலவுப் படி | 9,905,630.00 | 10,101,761.22 | 2,869,452.27 | 1,194,112.91 | 4,621.867.01 | 1,416,329.03 |
| - | 4221 | 20% விசேட கொடுப்பனவு | 12,087,000.00 | 425.73 | - | - | 425,73 | - |
| 1,550,063.40 | 4222 | ஆராய்ச்சிக் கொடுப்பனவு | 1,612,280.00 | 1,729,902.05 | 726,611.90 | 427,686.00 | 575,604.15 | - |
| 9,468,591.02 | 4223 | மேலதிக கொடுப்பனவு 20% | - | 10,191,532.04 | 2,704,865.87 | 1,222,283.31 | 4,822,334.47 | 1,442,048.39 |
| 406,805.14 | 4224 | ஆதனக் கடனுக்கான வட்டி | - | 292,003.86 | 148,264.47 | 96,959.86 | - | 46,779.53 |
| 21,262,638.35 | 4226 | MCA 35% | 22,776,000.00 | 22,926,217.10 | 6,085,948.19 | 2,750,137.47 | 10,845,522.55 | 3,244,608.89 |
| 921,861.15 | 4228 | சீர்படுத்தல் கொடுப்பனவு | - | 12,720.00 | 12,720.00 | - | - | - |
| 119,050,438.82 | | | 123,987,280.00 | 126,959.820.16 | 37,145,161.99 | 15,635,166.38 | 58,383,105.10 | 15,796,386.69 |
| **172,528,452.68** | | **உப மொத்தம்** | **177,000,000,00** | **176,356,989.02** | **39,974,390.97** | **15,635,166.38** | **97,285,220.76** | **23,462,210.91** |

| செலவுகள் 2019 | குறியீடு | விபரம் | பாதீடு 2020 | மொத்தச் செலவினம் | Pro 01-01 பொது நிர்வாகம் | Pro 01-02 நிதி நிர்வாகம் | Pro 02-17 பரீட்சை, கல்வி | Pro 03 நூலக சேவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **பிரயாணச் செலவினம்** | | | | | | |
| 10,258,888.22 | 501 | உள்நாடு | 16,000,000.00 | 12,337,418.69 | 58,788.66 | 6,305.00 | 12,272,325.03 | - |
| - | 502 | வெளிநாடு (ஓய்வு விடுப்பு, கருத்தரங்குகள் என்பன) | 250,000.00 | - | - | - | - | - |
| **10,258,888.22** | | **உப மொத்தம்** | **16,250,000.00** | **12,337,418.69** | **58,788.66** | **6,305.00** | **12,272,325.03** | **-** |
| | | **வழங்கல்கள்** | | | | | | |
| 8,142,071.69 | 601 | எழுது பொருட்களும் அலுவலக உபகரணங்களும் | 8,888,000.00 | 7,376,010.39 | 1,735,426.16 | 664,728.14 | 4,812,666.91 | 163,189.18 |
| 1,724,886.89 | 602 | எரிபொருள், உராய்வு நீக்கி | 1,600,000.00 | 1,397,408.80 | 1,397,408.80 | - | - | - |
| 377,484.29 | 603 | சீருடையும் தையல் கட்டணமும் | 400,000.00 | 65,047.50 | 28,672.00 | 5,320.00 | 21,878.50 | 9,177.00 |
| 117,543.95 | 604 | இயந்திரவியல் மற்றும் மின் உபகரணங்கள் | 401,000.00 | 405,832.50 | 365,072.50 | 2,810.00 | 18,330.00 | 19,620.00 |
| 3,366,815.98 | 605 | இரசாயன மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 1,200,000.00 | 219,020.00 | - | - | 219,020.00 | - |
| 749,005.35 | 606 | மருத்துவ வழங்கல்கள் | 980.000.00 | 1,449,227.31 | - | - | 1,449,227.31 | - |
| 181,201.00 | 607 | ஏனைய வழங்கல்கள் | 1,500,000.00 | 340,228.00 | 331,228.00 | - | - | 9,000.00 |
| **14,659,009.15** | | **உப மொத்தம்** | **14,969,000.00** | **11,252,774.50** | **3,857,807.46** | **672,858.14** | **6,521,122.72** | **200,986.18** |
| | | **பராமரிப்புச் செலவினம்** | | | | | | |
| 751,611.44 | 701 | வாகனங்கள் | 1,186,000.00 | 1,139,116.94 | 1,139,116.94 | - | - | - |
| 5,677,581.26 | 702 | பொறித் தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள் | 2,632,000.00 | 2,695,229.75 | 2,642,498.32 | 12,010.79 | 40,720.64 | - |
| 975,372.38 | 703 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 455,000.00 | 190,442.31 | 178,754.00 | 11,688.31 | - | - |
| 321,959.91 | 705 | ஏனையவை | 300,000.00 | 134,803.40 | 134,803.40 | - | - | - |
| **7,726,524.99** | | **உப மொத்தம்** | **4,573,000.00** | **4,159,592.40** | **4,095,172.66** | **23,699.10** | **40,720.64** | **-** |

| செலவுகள் 2019 | குறியீடு | விபரம் | பாதீடு 2020 | மொத்தச் செலவினம் | Pro 01-01 பொது நிர்வாகம் | Pro 01-02 நிதி நிர்வாகம் | Pro 02-17 பரீட்சை, கல்வி | Pro 03 நூலக சேவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **ஒப்பந்த சேவைகள்** | | | | | | |
| 3,138,844.11 | 801 | போக்குவரத்து | 2,800,000.00 | 2,151,790.32 | 2,151,790.32 | - | - | - |
| 5,715,412.43 | 802 | தொலைத் தொடர்புகள் | 8,500,000.00 | 10,032,660,99 | 9,847,520.52 | 33,091.18 | 121,052.92 | 30,996.37 |
| 1,130,031.24 | 803 | தபால் கட்டணங்கள் | 1,500,000.00 | 524,265.05 | 2,810.00 | 295,000.00 | 223,645.05 | 2,810.00 |
| 10,537,786.03 | 804 | மின்சாரம் | 17,500,000.00 | 13,074,700.60 | 13,074,700.60 | - | - | - |
| 7,617,869.75 | 805 | பாதுகாப்பு சேவைகள் | 9,426,000.00 | 7,934,490.00 | 7,934,490.00 | - | - | - |
| 933,583.07 | 806 | நீர் | 1,500,000.00 | 681,602.43 | 681,602.43 | - | - | - |
| 6,954,679.90 | 807 | சுத்திகரிப்பு சேவைகள் | 9,307,000.00 | 7,262,173.52 | 7,262,173.52 | - | - | - |
| 3,460,500.00 | 808 | வாடகைக் கட்டணங்கள் | 2,921,000.00 | 1,521,000.00 | 1,521,000.00 | - | - | - |
| 84,435.00 | 809 | வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 242,000.00 | 1,851.75 | 1,851.75 | - | - | - |
| 2,149,774.51 | 810 | அச்சிடல், விளம்பரங்கள் | 5,200,000.00 | 1,057,813.06 | 1,057,813.06 | - | - | - |
| 827,040.72 | 811 | ஏனையவை | 1,299,000.00 | 2,496,707.95 | 445,162.00 | 85,000.00 | - | 1,966,545.95 |
| **42,189,956.76** | | **உப மொத்தம்** | **60,195,000.00** | **46,739,055.67** | **43,980,914.20** | **413,091.18** | **344,697.97** | **2,000,352.32** |

| செலவுகள் 2019 | குறியீடு | விபரம் | பாதீடு 2020 | மொத்தச் செலவினம் | Pro 01-01 பொது நிர்வாகம் | Pro 01-02 நிதி நிர்வாகம் | Pro 02-17 பரீட்சை, கல்வி | Pro 03 நூலக சேவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்** | | | | | | |
| 26,246,945.50 | 901 | பல்கலைக்கழக பிரயாணக் கொடுப்பனவுகள் TE | 36,838,000.00 | 28,436,609.41 | - | - | 28,436,609.41 | - |
| 10,775,768.00 | 902 | விசேட சேவைகள் - கவுன்சில் , ஆணைக்குழு | 10,652,000.00 | 11,493,533.32 | 6,887,780.00 | 222,460.00 | 4,383,293.32 | - |
| - | 903 | விசேட சேவைகள் - தொழில்சார் | 729,000.00 | 20,000.00 | - | - | - | - |
| 2,950,037.23 | 904 | செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் | 1,968,000.00 | 1,426,212.00 | 619,000.00 | - | 807,212.00 | - |
| - | 905 | கல்விசார் ஆரய்ச்சி | 832,000.00 | 200,000.00 | - | - | 200,000.00 | - |
| 422,575.00 | 906 | ஆளணி அபிவிருத்தி | 1,020,000.00 | 258,000.00 | 174,000.00 | 15,000.00 | 69,000.00 | - |
| - | 907 | ஆதனக் கடன் வட்டி | 595,000.00 | - | - | - | - | - |
| 843,680.00 | 908 | விடுமுறை தின ஆணைச்சீட்டு மற்றும் பருவச்சீட்டு | 944,000.00 | 631,730.00 | 631,730.00 | - | - | - |
| 6,478,141.55 | 909 | பொழுதுபோக்குக் கொடுப்பனவு | 6,961,000.00 | 4,961,646.86 | 1,159,898.91 | 22,015.00 | 3,776,317.95 | 3,415.00 |
| 8,250,874.93 | 910 | வங்கிக் கட்டணம் | 6,000,000.00 | 7,197,405.54 | 37,623.95 | 361.05 | 7,152,109.58 | 7,310.96 |
| 1,283,750.64 | 911 | விருதுகள், நட்டஈடு | 2,620,000.00 | 1,034,598.81 | 1,034,598.81 | - | - | - |
| 1,048,317.00 | 912 | மாணவர்/ தொழிலாளர் நலன்புரி | 1,065,000.00 | 5,000.00 | 5,000.00 | - | - | - |
| 3,200,000.00 | 913 | பட்டமளிப்பு விழா | 3,054,000.00 | 5,000,125.00 | - | - | 5,000,125.00 | - |
| 67,565,531.05 | 914 | பரீட்சை செலவினங்கள் | 36,000,000.00 | 42,675,143.25 | - | - | 42,675,143.25 | - |
| 6,170,774.15 | 915 | ஏனையவை - பத்திரிகை, சஞ்சிகைகள் | 8,699,000.00 | 5,341,711.13 | 4,635,073.63 | 590,312.50 | 116,325.00 | - |
| 3,060.00 | 916 | பங்களிப்புத் தொகை, அங்கத்துவப் பணம் | 192,000.00 | 6,500.00 | 4,000.00 | - | 2,500.00 | - |
| **135,239,455.05** | | **உப மொத்தம்** | **118,169,000.00** | **108,688,215.32** | **15,208,705.30** | **850,148.55** | **92,618,635.51** | **10,725.96** |
| | | | | | | | | |
| **382,602,286.85** | | **மொத்த மீண்டெழும் செலவினம்** | **391,156,000.00** | **359,534,045.60** | **107,175,779.25** | **17,601,268.35** | **209,082,722,63** | **25,674,275.37** |

**2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான பங்கு மாற்றம் பற்றிய கூற்று**


ரூ.

| விபரம் | பொது இருப்பு (திருத்தப்பட்ட) | மூலதனம் | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | செலவிடப்பட்ட மூலதன அளிப்பு | செலவிடப்படாத மூலதன அளிப்பு | அன்பளிப்பு மற்றும் நன்கொடை | உருவாக்கப்பட்ட நிதியிலிருந்தான மூலதனச் செலவினம் | ஏனைய அளிப்புக்கள் | |
| **2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி** | **16,358,123** | **1,526,852,429** | **3,022,920** | **34,525,458** | **383,853,512** | **11,169,880** | **1,975,782,322** |
| ஆண்டிற்கான மூலதன அளிப்புக்கள் கிடைப்பனவு | | 398,111,679 | (398,834,738) | | | | (723,059) |
| நடப்பு ஆண்டிற்கான நிதி கிடைப்பனவு | | | 397,500,000 | 700,798 | 87,778,571 | 250,000 | 486,229,369 |
| முன்னைய ஆண்டின் சீர்படுத்துகை | 1,054,303 | | | | | | 1,054,303 |
| உருவாக்கப்பட்ட நிதியத்தினூடாக மூலதன செலவினத்திற்கான பங்களிப்பு | (87,778,571) | | | | | | (87,778,571) |
| மூலதன அளிப்புக்களின் புனரமைப்பும், பராமரிப்பும் | | | | | | | - |
| நடப்பு ஆண்டில் கொடுப்பனவுகள் | (465,500) | | | | | (487,146) | (952,646) |
| பெறுமானத் தேய்வு - மூலதன மானியம் | | (93,399,027) | | | | | (93,399,027) |
| கால எல்லைக்கான பற்றாக்குறை/(மேலதிகம்) | 192,687,731 | | | | | | 192,687,731 |
| **2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி** | **121,856,086** | **1,831,565,081** | **1,688,182** | **35,226,256** | **471,632,083** | **10,932,733** | **2,472,900,422** |
| ஆண்டின் மூலதன அளிப்பு செலவினம் | - | 44,170,657 | (44,170,657) | - | - | - | (0) |
| ஆண்டில் கிடைக்கப் பெற்ற நிதி | - | - | 85,000,000 | - | 59,123,855 | 789,657 | 144,913,511 |
| பெறுமானத் தேய்வு சீர்படுத்தல்கள் | 6,562,555 | - | - | - | - | - | 6,562,555 |
| உருவாக்கப்பட்ட நிதியத்தினூடாக மூலதன செலவினத்திற்கான பங்களிப்பு | (59,123,855) | - | - | - | - | - | (59,123,855 |

| விபரம் | பொது இருப்பு (திருத்தப்பட்ட) | மூலதனம் | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | செலவிடப்பட்ட மூலலதன அளிப்பு | செலவிடப்படாத மூலலதன அளிப்பு | அன்பளிப்பு மற்றும் நன்கொடை | உருவாக்கப்பட்ட நிதியிலிருந்தான மூலதனச் செலவினம் | ஏனைய அளிப்புக்கள் | |
| 2019 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகள்(ஏற்புடைய) | (3,016,901) | - | - | - | - | - | (3,016,901) |
| Other Adjustment | 3,679 | - | - | - | - | - | 3,679 |
| பெறுமானத் தேய்வு - மூலதன அளிப்பு | - | (96,975,744) | - | - | - | - | (96,975,744) |
| கால எல்லைக்கான பற்றாக்குறை/(மேலதிகம்) | 98,336,164 | - | - | - | - | - | 98,336,164 |
| **2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி** | **164,617,728** | **1,778,759,994** | **42,517,524** | **35,226,256** | **530,755,938** | **11,722,390** | **2,563,599,830** |

**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் 2019 முதல் 2020 வரை உள்ளக அடிப்படையில் ஈட்டிய வருமானம்**

| | 2019 | 2020 |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | 31,541,200 | 28,531,700 |
| கற்கை நெறிக் கட்டணம் | 179,781,357 | 146,160,241 |
| பரீட்சைக் கட்டணம் | 134,876,177 | 119,809,660 |
| ஏனையவை | 79,930,609 | 71,013,824 |
| **மொத்தம்** | **426,129,343** | **365,515,424** |



## 15. பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புக்கள் பற்றிய அறிக்கை

சிறந்த உடலாரோக்கியம்மிக்க சமூகமொன்றைத் தோற்றுவிப்பதனூடாக இலங்கைக்கு பேண்தகு அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவையை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது.

அதற்கமைய, எமது முக்கிய நோக்கம் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவையின் தரத்தை மேம்படுத்துவதுடன்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற) தரமான நிபுணத்துவ மருத்துவரின் சேவையை வசதியான மற்றம் பயன்மிக்க வகையில் பெற்றுக்கொடுப்பதாகும்.

இதில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன எமது நிறுவகத்துடன் இணைந்து செயற்படுகின்றன. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக எமது நிறுவகம் ஒழுங்குபடுத்தும் இரண்டு அடையாளங்கள் காணப்படுகின்றன.

அதில் முதலாவது, தரமான மருத்துவக் கல்வியைப் பெற்றக்கொடுப்பதன் ஊடாக நிபுணத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் முக்கியமானதொரு திருப்புமுனையாகும். இந்த அடையாளத்தை அடைந்துகொள்வதற்காக தரமான கல்வியை உறுதி செய்யுமுகமாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் சில தரங்களை உருவாக்கியுள்ளது. இது சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சுகாதார சுகாதாரத்துறை சார்ந்த கேள்விக்குப் பொருத்தக்கூடிய வகையில் பட்டப்பின் படிப்புத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் தனித்தனிக் குழுக்களை நிறுவியுள்ளது.

இரண்டாவது திருப்புமுனை, நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை முன்னேற்றத்திற்கு அளிப்பதன் ஊடாக இந்த நாட்டு மக்களின் உடலாரோக்கியம் மற்றும் ஆயுட்காலத்தை அதிகரிப்பதும், அதனுடன் தொடர்பான முதியோர் மருத்துவத் திட்டங்கள், மானிட ஊட்டச்சத்துத் திட்டங்கள், குழந்தை சுகாதாரத் திட்டங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலதிகமாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் பல்வேறு உடலாரோக்கியம் மற்றும் ஆயுட்காலம் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கிய பல்வேறு பட்டப்பின் படிப்பு பாடத் திட்டங்களை திருத்தியமைத்துள்ளது.

உடல் ஆரோக்கிய மட்டத்தை உயர்த்தும் நோக்கில் நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் நிபுணத்துவ மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மருத்துவர்களுக்கு ஒரு தரமான மருத்துவ பட்டப்பின் படிப்பு கல்வியை பெற்றுக்கொடுப்பதனூடாக இலகுவாக பேண்தகு அபிவிருத்தியை நோக்கி நாட்டிற்குப் பயணிக்க முடியுமாக இருக்கும். இதனூடாக அனைத்து பிரஜைகள் மற்றும் அவர்களது உடலாரோக்கியம்மிக்க ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்குப் போன்றே அனைத்து வயது மட்டங்களையும் கொண்ட ஆண்களின் மற்றும் பெண்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்த முடியுமாக இருக்கும். மருத்துவ பட்டப்பின் படிப்பானது மருத்துவர்கள் அவர்களது ஆரம்ப மருத்துவ தகைமைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் மேற்பார்வையின் கீழ் திறன்களை விருத்தி செய்வதுடன் அது மருத்துவர்களின் சான்றிதழ் மற்றும் / அல்லது அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தயார்செய்வதற்கான நடவடிக்கையாகும்.

தற்போது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முதுமாணிப் பட்டம் மற்றும் எம்.டி. பாடநெறிகளை நடாத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள ஒரே நிறுவகம் மருத்துவ பட்டப்பின் பின் படிப்பு நிறுவகமாகும்.பாடங்களுக்குப் பொறுப்பான சபைகளில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் தொடர்புடைய நிபுணர்கள் இருக்கின்றனர்.எம்.டி.பாடநெறியைப் பயிலும்போது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் அல்லது இந்திய போன்ற நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மையமொன்றில் குறைந்த பட்சம் ஒரு வருட கால வெளிநாட்டுப் பயிற்சி உள்ளடங்கும். மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் அனைத்து முக்கிய துறைகளிலும், துணைத் துறைகளிலும் நிபுணத்துவ அறிவை வழங்குகின்றது.

அனைத்து நிபுணத்துவ துறைகளிலும் பதவிகளுக்கான ஆளணியை உருவாக்குதல் சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குக்கூட பெரும்பாலான நிபுணத்துவத் துறைகளுக்கு நிபுணர்கள் போதுமானளவில் இல்லை.அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்காக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், மருத்துவர்களுக்கு பாடநெறிகளை வழங்குகின்றது. இதனூடாக நாட்டில் நிபுணத்துவ மருத்துவர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

பின்வரும் முறைகள் ஊடாக நாட்டின் நிபுணத்துவ மருத்துவர்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தரவுகளை சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. நகர்ப்புற மற்றம் கிராமப்புற மருத்துவமனைகளில் நிபுணத்துவ மருத்துவர்களாகப் பணியாற்றும் மருத்துவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்.
2. அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
3. மேலும், பொது மக்களின் பாலினம் மற்றும் ஏனைய உடல்நலம் தொடர்பான தேவைகளின் அடிப்படையில் நோய்களை இனங்கண்டுகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்கேற்ப நிபுணத்துவ மருத்துவர்களுக்குப் பயிற்சியளித்தல். உதாரணம் :- பெண் நோயியல், முதியோர் மருத்துவம்.
4. இராணுவ மற்றும் பொலீஸ் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
5. தனியார் மருத்துவமனைகள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
6. சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவமனைகளின் பணிப்பாளர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

மேற்கூறப்பட்ட விடயங்களை அடைந்துகொள்வதற்காக, கிராமப்புறம் உட்பட்ட அனைத்து மருத்துவமனைகளினதும் உட்கட்டமைப்பு வசதிகளும் இணையான வகையில் மேம்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அதனூடாக நிபுணத்துவ மருத்துவர்களால் நாட்டு மக்களுக்கு ஒரு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

மேலும் இந்த நிறுவகம் பேண்தகு அபிவிருத்தியின் பிரதான நோக்கங்களான சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் பசுமை எண்ணக்கரு ஆகிய பிரிவுகளின் கீழ் உச்சளவு சேவையொன்றை வழங்கி வருகின்றது. அதனுடன் தொடர்பான வகையில் மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் ஊடாக அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய பிரஜைகளின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் சுகாதார நிலையமொன்று மற்றும் பகல் நேர பராமரிப்பு மையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தவிர சக்திப் பாதுகாப்பு, Microsoft Teams போன்ற புதிய தொழில்நுட்பப் பயன்பாடுகள், சூழல்நேய நடத்தை மாற்றங்கள் மற்றும் சுகாதார நேய உணவுப் பழக்கங்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் ஊடாக அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய பிரஜைகளை அறிவுறுத்தும் நோக்கில் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும், மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் பசுமை மருத்துவ பட்டப்பின் நிறுவகமொன்றை உருவாக்கும் நோக்கில் பசுமை ஆரம்பமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், இந்தப் பேண்தகு பசுமை ஆரம்பமானது நீர் வளங்கள் மற்றும் வலுசக்தி பாதுகாப்பைப் போன்றே சுத்தமான சூழல் எனும் எண்ணக்கருவை விருத்தி செய்யும். அதனை முழுமையானதொரு எண்ணக்கருவாக்கும் நோக்கில் 2020 ஆம் ஆண்டில் நிறுவகத்தினுள் பசுமை எண்ணக்கருவை அறிமுகஞ் செய்து எழுத்து மூலமாக குறித்த எண்ணக்கரு தாபிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பசுமைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டு முதல் அந்தக் குழு பல்வேறுபட்ட சூழல்சார் அடையாளங்களின் அடிப்படையில் செயற்படுகின்றது. மருத்துவ பட்டப்பின் நிறுவகம் குறித்துரைக்கப்பட்ட நோக்கம், நோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றைப் போன்றே கோட்பாடுகளையும் கொண்டுள்ளது. மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினூடாக பிரதான வளாகத்தில் காணப்பட்ட CFL மின் குமிழ்களுக்குப் பதிலாக LED மின் குமிழ்கள் பொருத்தப்பட்டதுடன் ஸ்மார்ட் கட்டிடமொன்றாகக் கருத முடியுமான ரொட்னி வீதியில் நிர்மாணிக்கப்பட்ட கற்கை மையத்திலும் LED மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் மாறுதிசையாக்கி வளி

சீரமைப்பிகள் (inverter A/Cs), மாஸ்ட்டர் சுவிச் மற்றும் குறைந்த சக்தி மற்றும் வலுசக்தியை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு போட்டோ பிரதி இயந்திரங்கள் மற்றும் ஸ்கேனர்கள் போன்ற சாதனங்களை இணைந்து பயன்படுத்துவதனையும் ஊக்குவிக்கப்பட்டது. நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட பசுமை ஆரம்பங்களிடையே மிகவும் முற்போக்கான நடவடிக்கை காகிதப் பயன்பாடுகளின்றிய நிறுவகமொன்றாக மாறுவதாகும். ஆய்வுக் கட்டுரைகள் தவிர ஏனைய அனைத்து எழுத்தாவணக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கையளிப்புக்களை மின்னஞ்சல் மூலமாக மேற்கொள்ளுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து உள்ளக ரீதியிலான தொடர்பாடல்களையும் Microsoft Teams ஊடாக மேற்கொள்வதுடன், அனைத்துக் குழுக் கூட்டங்கள் மற்றும் விரிவுரைகள் இணையவழி மூலமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த அணுகுமுறை ஊடாக காகிதங்கள் பயன்பாடு 65% - 70% வரை குறைத்துக்கொள்ளப்பட்டது. ஸ்மார்ட் கட்டிடத்தில் கை உலர்த்திகள் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் அங்கு கை துடைக்கும் காகிதங்களைக் குறைத்து காகிதக் கழிவுகளைக் குறைக்கும் நோக்கத்திலாகும். தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி அச்சிடல் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுவதுடன் சுமார் இரண்டு வருடங்கள் மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தில் பணி புரிபவர்கள் கண்ணாடி உபகரணங்கள் மற்றும் இயற்கையாக உக்கும் கோப்பைகளைப் பயன்படுத்துகின்றனர். உணவகத்தில் பொலித்தீன் உணவுப் பொதியிடல் தாள்கள் பயன்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அனைவரும் தமது உணவுகளை பாத்திரமொன்றில் எடுத்துவரல் வேண்டும். கழிவுப் பொருட்களை வேறாக்குதலை CMC தரப்படுத்தலுக்கமைய தனித் தனியான குப்பைக் கூடைகளில் கழிவுகள் இடப்படுகின்றது.

## 16. சிறப்பு நிகழ்வுகள் 2020






**Presentation of token of appreciation to Former Director by the existing Director/PGIM**




**Speech delivered by Prof. Janaka de Silva former Director/PGIM at the farewell celebration**



**Mrs. Dilhani Munasinghe, Senior Assistant Librarian receives Senate awards for Research Excellence 2018/2019**



**Unavailing the portrait of Prof. Janaka de Silva, Former Director/PGIM by the Chairman/BOM**

## 17. கணக்காய்வறிக்கை




**பணிப்பாளர்**
மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**பிரதிகள் :**

01. செயலாளர் - கல்வி அமைச்சு
02. செயலாளர் - நிதி அமைச்சு
03. தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆஜணக்குழு
04. துணைவேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம்

பணிப்பாளர்,
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரை**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107 (5) உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக ஒழுங்கு விதிமுறையில் 20 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சபையில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் ஊடான தாக்கங்கள் தவிர, நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை**

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது பந்திக்கிணங்க சொத்தொன்றின் எஞ்சியுள்ள பயன்மிக்க ஆயுட் காலத்தைக் குறைத்து வருடாந்தம் அறிக்கைப்படுத்தல் காலப் பகுதி முடிவடையும் திகதியன்று மீளாய்வுக்குட்படுத்த வேண்டுமென்பதோடு எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டின் வேறுபாடாக கணக்கில் பதிதல் வேண்டும். ஆயினும் மொத்தமாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்டிருந்த ரூ. 306,946,647 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 18 ஆவது பந்திக்கு முரணாக துல்லியமாக மதிப்பீடு செய்ய முடியுமான அட்டுறு செலவான ரூ.1,109,188 அதிகமாக குறிப்பிட்டிருத்தல் மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்பான மொத்தம் ரூ.545,000 அட்டுறு செலவை கணக்கில் பதியப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் மேலதிகம் ரூ. 564,188 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதி ரூ.4,100,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனமொன்றுக்காக மீளாய்வாண்டுடன் தொடர்பாக ரூ.820,000 தேய்மானத்தை கணக்கில் பதியாமையினால் ஆண்டில் மேலதிகம் மற்றும் ஆண்டின் இறுதித் திகதியன்று ஆதனங்களின் தேறிய பெறுமதி அந்த அளவினால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

**1.3 நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்**

இந்த கணக்காய்வறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது சம்பந்தமான எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் எனக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்தினூடாக ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் அது சம்பந்தமாக எந்த விதமான உறுதிப்படுத்தலையோ அல்லது கருத்தையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய எனது பொறுப்பு என்னவெனில், மேலே இனங்கண்டுகொள்ளப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமாகும்போது வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கமைய பொருண்மை ரீதியில் பொருந்துவதில்லையா என்பதனை கவனத்திற்கொள்வதாகும்.

**1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தின் தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிறுவகத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள்

இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் நிறுவகத்தின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்றுக்கள் ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது

கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எந்த விடயமும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிறுவகத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் ஏதேனுமொரு ஏற்புடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் அலுவல்களுடன் இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் மற்றும் பயன்மிக்க வகையில் காலப் பகுதியனுள் ஏற்புடைய சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த பிடிமானத் தொகை உட்பட மொத்தம் ரூ. 30,656,944 செலுத்த வேண்டிய மீதி 01 தொடக்கம் 04 வருடங்கள் பழைய மீதி என அவதானிக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில் இந்த மீதிகளில் தொடர்ந்தும் கடப்பாட்டைக் கொண்டிருக்காத செலுத்த வேண்டிய மீதிகளை அரசாங்கத்தின் வருமானத்திற்குப் பெற்று சீர்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் PGIM Research & Publication நிதியத்தில் நிலவும் ரூ.3,605,803 தொகை மீதியை நிதியத்தின் நோக்கங்களுக்கான திட்டமிடலுடன் பயன்படுத்திக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய 09 உருப்படிகளில் 27 அலகுகள் மேலதிகம் மற்றும் 25 உருப்படிகளில் 36 அலகுகள் குறைவாகவும் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் தினமான 2020 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அந்த மேலதிகம் மற்றும் குறைபாடு தொடர்பில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் நூலகப் புத்தகங்கள் மற்றும் அறிக்கை வெளியீடுகளுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றிருந்த மொத்தம் ரூ.1,625,666 தொகை ஏற்புடைய அலுவல்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**Postgraduate Institute of Medicine**
University of Colombo, Sri Lanka

*Professor Senaka Rajapakse*
MD, FRCP(Lon), FRCP(Edin), FCCP, FACP, FNAS(SL)
**Director**

AB/C

2021 மே மாதம் 07 ஆம் திகதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்.

**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேலே குறிப்பிடப்பட்ட விடயத்துடன் சம்பந்தமாக, 2021 மே மாதம் 05 ஆம் திகதி எமக்குக் கிடைக்கப்பெற்ற HED/B/PGIM/2020/FA/03 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பான விடயங்களை இத்துடன் சமர்ப்பிப்பதாக தயவாய் அறியத் தருகின்றேன்.

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை**

(அ) நிறுவகத்தில் நிலவும் தொழில்நுட்பச் சொத்துக்கள் சம்பந்தமாக பயன்மிக்க ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்வதற்கு நிறுவகத்தில் பணியாற்றும் அலுவலர்களிடம் காணப்படும் துறை சார்ந்த அறிவு போதாமையினால் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) போக்குவரத்துப் படி, பரீட்சைக் கட்டணம், விரிவுரையாளர் கட்டணம் என்பவற்றுக்காக செலுத்த வேண்டிய செலவுகளை பரீட்சைகள் மற்றும் கற்கைப் பிரிவுகளினால் ஆண்டிறுதியில் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் அந்தப் பிரிவுகளுக்கு அதற்குச் செலவாகும் அளவை நிச்சயித்துக் கணக்கிடுவதற்கான வாய்ப்பு இல்லாமையினால் அதற்காக மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நிதி ஏற்பாடாக இலாபத்தில் தனியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த திணைக்களத்துடன் கலந்துரையாடி 2021 ஆம் ஆண்டிற்காக குறித்துரைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் அளவை பெற்று சரியான முறையில் கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது வரை விடுபட்டுள்ள ரூ.545,000 அட்டுறு செலவு கணக்கில் பதியப்பட்டுள்ளது. (இணைப்பு - 01)

(இ) 2021 ஆம் ஆண்டில் இந்தத் தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இணைப்பு - 02 J/N 00001C)

**(3) ஏனைய விடயங்கள்**

(அ) இந்தப் பிடிமானத் தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 03) அத்தோடு முன்னைய ஆண்டுகளுடன் தொடர்பான பிடிமானத் தொகையை நடைமுறையல்லாத சொத்துக்களாக சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) PGIM Research & Publication நிதியத்தின் நோக்கங்களுடன் தொடர்பான அலுவல்கள் கடந்த இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக அந்த நிதியத்தின் நிதி பயன்படுத்தப்படவில்லை.

(இ) இந்த மீதித் தொகையை 2021 ஆம் ஆண்டில் ஏற்புடைய செலவுகளுக்காக பயன்படுத்தப்படும்.

**பணிப்பாளர்**
மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

අනුප්‍රති 05

Page

# POSTGRADUATE INSTITUTE OF MEDICINE
UNIVERSITY OF COLOMBO

JOURNAL LISTING AS AT 09/04/21

| ACC NO | NAME | Vote | NARRATION | DEBIT | CREDIT |
|---|---|---|---|---|---|
| Journal No | 00001A Date 01/01/21 | | | | |
| 122001 | GENERAL RESERVE OF THE INSTITUTE | | OUTSTANDING EXPENSES- SPECIAL SERV | 545,000.00 | |
| 163001 | OUTSTANDING EXPENSES | | OUTSTANDING EXPENSES 2020- SPECIAL | | 545,000.00 |
| | | | | 545,000.00 | 545,000.00 |

Narration:
BEING IDENTIFING OUTSTANDING EXPENSES RELEVANT TO YEAR 2020. (AUDIT QUERY 31)

Prepared by:.....
Checked by :.....
Date :.....

.....
Deputy Bursar/Senior Assistant Bursar

LAN Printer LICENSED BY INTERPOL, logan.kannan@gmail.com

අමුණුම 01



# POSTGRADUATE INSTITUTE OF MEDICINE
UNIVERSITY OF COLOMBO

## JOURNAL LISTING AS AT 21/04/21

| ACC NO | NAME | Vote | NARRATION | DEBIT | CREDIT |
|---|---|---|---|---|---|
| Journal No | 00001C Date 01/01/21 | | | | |
| 122001 | GENERAL RESERVE OF THE INSTITUTE | | MOTOR VEHICLE DEPRECIATION-2020 | 820,000.00 | |
| 165003 | PROV.FOR DEP. VEHICLE | | MOTOR VEHICLE DEPRECIATION-2020 | | 820,000.00 |
| | | | | 820,000.00 | 820,000.00 |

Narration:
BEING PROVISIONED FOR DEPRECIATION OF MOTOR VEHICLE (YEAR 2020)- AUDIT QUERY 30

Prepared by:.....
Checked by :.....
Date :..21/04/2021

.....
Deputy Bursar/~~Senior Assistant Bursar~~

ඇමුණුම 03

AB/G

23rd March 2021

Senior Assistant Registrar/General Administration

**REFUND OF RETENTION MONEY**

Please make necessary arrangements to refund the amount where retention period has expired immediately.

The schedule of retention money from 2016 to 2020 are as follows.

| Date | Name | Amount (Rs.) |
|---|---|---|
| 16/02/2016 | Micro Construction (Pvt) Ltd | 101,655.00 |
| 11/04/2016 | Yasara construction | 98,425.00 |
| 13/06/2016 | Udayakantha Aluminium Fabricators | 5,040.00 |
| 24/11/2016 | Udayakantha Aluminium Fabricators | 20,123.80 |
| 08/12/2016 | Udayakantha Aluminium Fabricators | 2,507.65 |
| 22/12/2016 | M A R Construction | 9,267.95 |
| 04/01/2017 | Siyasara Construction | 15,138.31 |
| 09/01/2017 | Micro Construction (Pvt) Ltd | 15,270.00 |
| 18/05/2017 | Dulanga associates | 7,080.00 |
| 18/05/2017 | Siyasara Construction | 74,094.23 |
| 17/08/2017 | Siyasara Construction | 6,121.50 |
| 23/10/2017 | Siyasara Construction | 15,780.27 |
| 08/02/2018 | Sri Lanka Telecom Services Ltd | 26,425.60 |
| 29/06/2018 | Siyasara Construction | 12,364.08 |
| 17/08/2018 | Siyasara Construction | 15,008.55 |
| 14/11/2018 | Udayakantha Aluminium Fabricators | 3,020.00 |
| 14/05/2019 | M/S M3 Force (Pvt) Ltd | 20,381.13 |
| 11/07/2019 | United Electrical Engineering | 6,625.00 |
| 14/10/2019 | Amil Builders | 74,850.00 |
| 17/10/2019 | Yasara construction | 113,020.19 |
| 04/03/2020 | Yasara construction | 11,688.31 |
| 23/07/2020 | Udayakantha Aluminium Fabricators | 27,866.00 |
| 29/07/2020 | Udayakantha Aluminium Fabricators | 23,828.80 |

Deputy Bursar

Cc: Deputy Registar